செய்தி வெளியீடு எண். 682 நாள்.13.8.2010

திருத்தப்பட்டது

## செய்தி வெளியீடு

### தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியக் கூட்டம்

தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியக் கூட்டம் சென்னை கிண்டியில் உள்ள வேளாண் விற்பனை வாரிய கட்டிடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத் தலைவர் அக்ரி கே.பி.டி. கணேசன் தலைமை தாங்கினார்.

வேளாண்மைத் துறை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் பி. இராம மோகனராவ், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் அதுல் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத்தலைவர்கள், விற்பனைக்குழு செயலர்கள் கலந்து கொண்டனர். இந்த வாரியக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழியை செம்மொழியாக்கி முதலாவது உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தி தமிழுக்குப் பெருமை சேர்த்தமைக்கு இவ்வாரியக் கூட்டம் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாடு அரசு தகவல் தொழில் நுட்பத்துறை மூலம் " அக்ரீஸ் நெட்" துவக்கி வைத்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு இணையதள தொடர்புகளை, ஏற்படுத்திக் கொடுத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழக தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பூங்கோதை அவர்கள், தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து வாரியக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம் படாளம் கிராமத்தில் உள்ள மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை விவசாயிகள் நலன் கருதி மீண்டும் திறந்து வைத்தமைக்காக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில் விளையும் வாழை பெங்களூருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பழுக்க வைக்கப்பட்டு, மீண்டும் தமிழகத்தில் சந்தைப்படுத்தப்படுகிறது. அதை மாற்றும் வகையில் தற்போது ரூ.2 கோடி திட்டத்தில் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், தேனி மாவட்டம் சின்னமனூர், திருச்சி மாவட்டம் திருச்சி, நாமக்கல் மாவட்டம் மோகனூர் ஆகிய இடங்களில் தலா ரூ. 50 லட்சம் செலவில் தலா 5 மெட்ரிக் டன் அளவில் வாழையை பதப்படுத்தி பழுக்கவைக்கும் நிலையங்கள் அமைத்திட உத்தரவிட்டு, நிதியுதவி வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் வேளாண்துறை அமைச்சர் அவர்களுக்கும் வாரியத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழக வேளாண் விற்பனை வாரியம் மூலம் இயங்கி வரும் 20 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ரூ.7 கோடி மதிப்பில் ஊரக கிட்டங்கிகள் அமைக்கவும், 15 உலர்களங்கள் தலா ரூ.2.8 லட்சம் வீதம் மொத்தம் 4.2 கோடி செலவில் அமைக்கவும் உத்தரவிட்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

திராட்சை பழத்திற்கு தேனி மாவட்டம் ஒடைப்பட்டியிலும், தக்காளிக்கு சேலம் மாவட்டம் மேச்சேரியிலும், கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலும், வெங்காயத்திற்கு திருப்பூர் மாவட்டம் பொங்கலூரிலும், தேங்காய்க்கு திருப்பூர் மாவட்டம் பெதப்பம்பட்டியிலும் ரூ- 1 கோடி செலவில் குளிர் பதனிடும் வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. பட்டுக்கோட்டையில் தேங்காய்க்கு 4 கோடி செலவில் வணிக வளாகம் அமைய உள்ளது. இதற்கு அனுமதி வழங்கி அரசாணைகள் பிறப்பித்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் வேளாண்துறை அமைச்சர் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றி தெரிவிக்கிறது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு உழவர் சந்தையிலும் அன்றாடம் விற்கப்படும் காய்கறி கனிகள் விலைகள் சென்னை வேளாண் விற்பனை வாரிய மூலம் விற்பனை பட்டியல் அன்றாடம் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

ரூபாய் 45 லட்சம் செலவில் வேளாண் விற்பனை வாரியம் மூலம் டெமிக் (DEMIC) எனப்படும் வேளாண் விளைபொருள் தகவல் நுண்ணறிவு மையம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முன்பதிவு செய்த விவசாயிகளுக்கு இதன் மூலம் வேளாண் விற்பனை விபரங்களை எஸ்.எம்.எஸ். மூலம் அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக விழுப்புரம் மாவட்டத்தில் 200 விவசாயிகள் பதிவு செய்து தினமும் வேளாண் விலை நிலவரங்கள் எஸ.எம்.எஸ். மூலம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு வாரிய தலைவர் அக்ரி கே.பி.டி. கணேசன் தெரிவித்தார்.

மேலும் மாவட்ட விறப்னைக்குழு தாலைவர்கள் உழவர் சந்தைகளுக்கு தராசு, இடவசதி, காய்கனிகள் கொண்டு செல்ல பஸ்வசதி, கழிப்பிடம், குடிநீர் ஆகியவற்றை தமிழக அரசு இலவசமாக செய்து தருகிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது போல் உழவர் சந்தைகளுக்கும், தமிழக அரசால் இலவச மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் தராசுகளுக்கு முத்திரைக் கட்டண விலக்குத் தர வேண்டுமென்றும் கூட்டத்தில் அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர்.

புதிய உழவர் சந்தைகள் அமைய இருக்கும் இடங்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் விரைந்து முன்அனுமதி வழங்கினால் புதிய உழவர் சந்தைகள் விரைவில் அமைத்திட ஏதுவாக இருக்கும் என்றும் கருத்து தெரிவித்தனர்.

வெளியீடு
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,சென்னை–**9.**